கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 72/2020

வாதி தரப்பு சாட்சி -1 சங்கப்பிள்ளை திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.04.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பாட்டனார் பெயர் நல்லியாப்பிள்ளை. அ வருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 நபர்கள். அவர்கள் முறையே முத்துபிள்ளை, ஆறுமுகம்பிள்ளை ஆகியோர்கள். எனது தந்தை முத்துப்பிள்ளைக்கு என்னுடன் சேர்த்து 5 ஆண் வாரிசுகள் 2 பெண் வாரிசுகள். அரியதம்பி, பெருமாள், பொன்னுசாமி, கன்னியப்பன் ஆகியோர் என்னுடன் பிறந்தவர்கள் ஆவார்கள். பெருமாயி மற்றும் சின்னப்பிள்ளை என்னுடன் பிறந்த சகோதரிகள். எனது சித்தப்பா ஆறுமுகத்திற்கு நல்லுசாமி மட்டுமே ஆண் வாரிசு ஆவார். வழக்கு விவரங்களை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். வழக்கு சொத்துக்களுக்கு அருகில் எனக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு எந்த பக்கம் எனது பூர்வீக சொத்து உள்ளது என்றால் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் உள்ளது.

2. பூர்வீக சொத்தில் என்னுடன் பிறந்த சகோதர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை என் அண்ணன் மற்றும் தம்பியிடமிருந்து இரண்டு பத்திரங்களின் மூலம் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். ஒவ்வொரு சொத்தும் 30 முதல் 35 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. நீதிமன்றத்தில் ஒரு கிரைய பத்திரத்தை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல இரண்டு பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனது இடத்திற்கு கீழ்புறம் ஆத்துவாரி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் ஆத்துவாரிக்கு மேற்கு புறம் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களில் எனக்கும் பிரதிவாதிக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை முத்துபிள்ளை மற்றும் ஆறுமுகப்பிள்ளை இருவருக்கும் எழுத்து மூலமாக பாகப்பிரிவினை ஏதும் ஏற்பட்டுள்ளதா என்றால் ஏற்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை பற்றிய விவரங்களை இவ்வழக்கில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

3. எனக்கும் என் சகோதரர்களுக்கும் இடையே எழுத்து பூர்வாகமாக ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி இவ்வழக்கில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வா.சா.ஆ.2

கிரைய பத்திரத்தில் பாகப்பிரிவினை பற்றிய விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல பாகப்பிரிவினை பற்றிய விவரம் வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது உடன் பிறந்தவர்களும் எப்போது பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு செய்து கொண்டோம். பட்டா தனித்தனியாக அவரவர் பெயருக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.12.2014 ம் தேதி கிரையம் பெறும் போது அதில் பெருமாள்பிள்ளை பெயரிலும், சரஸ்வதி, மாரியாயி, சங்கப்பிள்ளை ஆகியோர் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது.

4. தற்போது வரை கூட்டுபட்டாவாக மட்டுமே உள்ளது என்றும், தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மற்றும் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இதர சொத்துககளுக்கும் நான்கெல்லை விவரம் தெரியுமா என்றால் வடக்கே ஆத்துவாரி, மேற்கே பன்னீர் என்பவர் நிலம், கிழக்கிலும் ஆத்துவாரி, தெற்கே கல்லுக்குழிக்கு செல்லும் ரோடு உள்ளது. மேற் சொன்ன சொத்துக்கு ஆத்துவாரியை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. வடக்கே உள்ள நிலத்திற்கு தான் ஆத்துவாரியை தாண்டி செல்ல வேண்டும். மற்ற நிலங்களுக்கு செல்ல ரோடு உள்ளது. எனது நிலத்திற்கும், பிரதிவாதி நிலத்திற்கும் அருகே புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புறம்போக்கு நிலத்தில் பண்ணை குட்டை அமைத்திருந்து அதை தற்போது மூடி விட்டார்கள் என்றால்சரிதான். பண்ணைக்குட்டை வழியாக தான் நானும், நல்லுசாமியும் புறம்போக்கு நிலத்தை பயன்படுத்தி எங்கள் நிலங்களுக்கு செல்ல வேண்டும என்றால் சரியல்ல.

5. மேற்படி பண்ணைக்குட்டை யார் சொல்லி அமைத்தார்கள் என்றால் நான் சொல்லி தான் அமைத்தார்கள். மேற்படி பண்ணைக்குட்டையில் நான் விவசாயம் செய்வதால் அதனால் முடிவிட்டோம். தனிநபர் விவசாயம் செய்ய புறம்போக்கில் உள்ள பண்ணைக்குட்டை அமைத்து தரமாட்டார்கள் என்றால் சரிதான். முத்துப்பிள்ளை வகையறாவிற்கு மொத்தம் எவ்வளவு நிலம் பாத்தியம் என்றால் ஒவ்வொருக்கும் சுமார் 35 முதல் 40 செண்ட் வரை பாத்தியம். நல்லுசாமிக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் அளவு நல்லுசாமிக்கும் பாத்தியம் என்றால் சரிதான். பிரததிவாதி நல்லுசாமி அந்த இடத்தில் தான் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால்சரிதான். எங்களுங்கது பாத்தியப்பட்ட நிலம் விவசாயம் நிலம் என்றால் சரிதான். அது வானம் பார்த்த பூமியா என்றால் சரிதான். எங்கள் நிலத்தில் ஒரு

பங்கு நிலம் மேடாகவும், ஒரு பங்கு நிலம் பள்ளமாகவும் அது ஆத்து வாரியை ஒட்டியும் உள்ளது என்றால் சரிதான்.

6. எனது கிரையதாரர்கள் பிரதிவாதிக்கும் பாதைக்காக சுமார் 3 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 3 செண்ட் பாதை நிலத்தை தவிர்த்து மற்ற நிலங்களை தான் எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 3 செண்ட பாதை நிலம் போக நான் கிரையம் பெற்ற சொத்தின் விஸ்தீரணம் 40 ½ செண்ட் ஆகும். சர்வே எண்.475/2A ல் மொத்தம் 4 செண்ட் நிலத்தில் பிரதிவாதிக்கு பாதைக்காக விற்ற ½ செண்ட் போக மீதி 3 1/2 செண்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.475/2B ல் மொத்தம் 40 செண்ட் அதில் பிரதிவாதிக்கு பாதைக்காக விற்ற 2 ½ செண்ட் நிலம் போக மீதமுள்ள நிலம் எனக்கு பாத்தியப்பட்டதாகும் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற நிலம் கேணியையும் சேர்த்து 40 ½ செண்ட் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது போல பூஸ்துதி சரியாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்வதாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏன் அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்னே். அதனால் தாக்கல் செய்யவில்லை.

7. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சொல்லியுள்ளது போல் நல்லுசாமிக்கும் எனக்கும் நிலத்தை அளந்து அத்து காட்டுமாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்ததின் அடிப்படையில் எங்களது நிலம் அளக்கப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்தை மட்டும் அளக்க சொல்லி மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கீத்து கொட்டகை ஒன்றை புறம்போக்கு நிலமான பண்ணைகுட்டை அமைத்துள்ள இடத்தில் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். நல்லுசாமி மேற்சொன்ன இடத்தை தான் பாதையாக பயன்படுத்தி அவர் வீட்டிற்கு சென்று வந்தார் என்றும், அதை ஆக்கிரமிப்பு செய்து அவரது பாதை மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பாதையாக பயன்படுத்தி வந்த நிலத்தை அவருக்கு இடைஞ்சல் கொடுக்கும் வகையில் ஆக்கிரமிப்பு செய்து பொய்யாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. எனது தரப்பில் பிரதிவாதிக்கு எதிராக சுமார் 5 முதல் 6 முறை புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். காவல் துறையினர் என்னையையும், பிரதிவாதியையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். இவ்வழக்கினை ஏன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே கல்லை பிரதிவாதி பறித்துவிட்டதால் தாக்கல் செய்தேன். மேற்படி விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சர்வே கல்லை அகற்றியவர்கள் மீது

அரசு அதிகாரிகள் தான் காவல் நிலையத்தில் புகார் அளித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் சரிதான். அரசு அதிகாரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வரப்பில் 5 பனை மரங்கள் இருந்தது என்றும், அதை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார் என்றால் சரிதான். தற்போது அதில் எத்தனை பனை மரங்கள் உள்ளது என்றால் ஒரு பனை மரம் மட்டுமே உள்ளது. எனது பங்கியில் உள்ள மீதி 2 பனை மரங்களை நான் பிடிங்கிவிட்டேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court, read over and interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**